# வரணம் எம் வசம்



தமிழ்த்தாய் வெளியீடு

[illegible]

# வானம் எம் வசம்

3 422

தமிழ்த்தாய் வெளியீட்டகம்
664, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

வெளியீடு - 22

வானம் எம் வசம்
( 29 கவிஞரின் கவிதைகள் )
முதற் பதிப்பு: 28. 05. 1995
வெளியீடு:
தமிழ்த்தாய் வெளியீட்டகம்
பதிப்பு: மாறன் பதிப்பகம்,
664, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.
ஓவியங்கள் : தயா
விலை: ரூபா 35/=

Vaanam Em Vasam
( Collection of Poems )
First Edition: 28. 05. 1995
Published by:
Thamilthai Veliyeeddakam
Printed at :
Maran Pathipakam,
664, Col. Kiddu Salai,
Jaffna.
Cover and Illustrations by:
Thaya
Price: Rs 35/=



## ஒரு கவிஞனின் கனவு

## நனவாகின்றது...

பறவையின் நிரையென
வானிடை யெழுந்தன
பகைவர் ஊர்திகளே !

சிறகுகள் துகள்பட
அவைமிசை பறந்தன
தமிழர் கருவிகளே !

திறலுடை தமிழரின்
பொறிபல கணைகளை
அள்ளிச் சிதறினவே !

கொடும் பொறிக் குண்டுகள்
வெடித்தெழ வானகம்
கூந்தல் விரித்தாற் போல்

நெடும்புகை எழுந்தது !
பகைவரின் கொடிகளும்
நெருப்பில் வாடினவே !

கடும்புயல் அடித்ததை
நிகர்த்தது களத்திலே
தமிழர் போராட்டம் !



- காசி ஆனந்தன்

" தமிழன் கனவு " ( 1968 )

# உள்ளே...

பதிப்புரை
☆ தில்லைச்சிவன் 1
☆ ந. வீரமணி ஐயர் 3
☆ ச. வே. பஞ்சாட்சரம் 5
☆ முருகையன் 7
☆ பண்டிதர் வீ. பரந்தாமன் 9
☆ நம்பியாரூரன் 12
☆ புதுவை இரத்தினதுரை 15
☆ அ. யேசுராசா 17
☆ சசிவர்ணன் 19
☆ ந. கிருஷ்ணசிங்கம் 20
☆ இளையவன் 22
☆ விவேக் 24
☆ கருணாகரன் 26
☆ இயல்வாணன் 28
☆ கி. சிவஞானம் 29
☆ சத்துருக்கன் 31
☆ ஆதிலட்சுமி சிவகுமார் 32
☆ சுதாமதி 34
☆ உதயலட்சுமி 36
☆ வேலணையூர் சுரேஸ் 39
☆ த. ஜெயசீலன் 41
☆ தெல்லியூர் ஜெயபாரதி 42
☆ ஐ. தயாபரன் 43
☆ வெள்ளை 44
☆ வி. பிரபாகரன் 45
☆ நாமகள் 48
☆ மயன் – 2 50
☆ மு. வே. யோ. வாஞ்சிநாதன் 53
☆ வளவை வளவன் 55

## பதிப்புரை

இது ஒரு கவிதை நூலுக்கான பதிப்புரை மட்டுமல்ல; தமிழர் படைபலத்தின் வளர்ச்சிகாரணமாகப் பிறந்த மகிழ்ச்சி நிலையைப் பதிவுசெய்த ஒரு வரலாற்று ஆவணத்தின் முகவுரை.

1995 சித்திரை 28, 29: தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பொறுத்தளவில், இவை ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்க நாட்கள். தமிழ் மக்களை சதா அச்சுறுத்தியபடி இருந்த சிங்கள வான்படை விமானங்களில் இரண்டை - யாழ்ப்பாண வான்பரப்பில் வைத்து - புலிவீரர்கள் சுட்டு வீழ்த்திய நாட்கள் அவை. இந்த நாட்களில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் - தமிழச்சியும் அதற்காகப் பெருமை அடைவதுடன், தாங்கள் இறக்கும்வரை இந்த நிகழ்ச்சியை மறக்கவும் மாட்டார்கள். அந்தளவுக்கு, இந்த இராணுவ சாதனை, எமது மக்களுக்குப் பெரும் புளகாங்கித உணர்வைக் கொடுத்திருந்தது. வீதிகளில் குழுமிநின்றும், வீடுகளில் இருந்தபடியும் எமது மக்கள் வெளிப்படுத்திய இந்தப் பேருவகையை, எமது மண்ணின் கவிஞர்கள் சிலர் இந் நூலில் பதிவுசெய்துள்ளனர்.

▼

இந்தக் கவிதை நூலை உருவாக்கத் தொடங்கும்போதே, நூல் வெளியீட்டு விழா தொடர்பாக, தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஒரு முடிவை எடுத்துவைத்திருந்தது. சிங்கள வான்படை வானூர்திகளால் தமது இரத்த உறவுகளை இழந்த குடும்பங்களின் உறுப்பினர்களை அழைத்து, இந்த வரலாற்றுச் சாதனையைப் பதிவுசெய்த கவிஞர்களைக் கௌரவிப்பது என்பதே, அந்த முடிவாகும். இந்த இராணுவ சாதனை நிகழ்த்தப்பட்டு ஒருமாத நிறைவு நாளாகிய இன்று (28. 05. 1995) அந்த முடிவை நடைமுறைப் படுத்துவதையிட்டு, 'தமிழ்த்தாய் வெளியீட்டகம்' மனநிறைவு அடைகின்றது.

இந்த நூல் உருவாகத் துணைநின்ற விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்திற்கும்; கவிதைகளைப் படைத்தளித்த கவிஞர்களுக்கும்; ஏனையோருக்கும் எமது நன்றிகள்!

தமிழ்த்தாய் வெளியீட்டகம்

# பரணிபாடுவோம்

*தில்லைச்சிவன்*

வானத்தில் ஊர்ந்து வந்தது கண்டதன்
வடிவு பார்க்க அங்காந்த வேளையில்
ஈனமாக மலப்பீப்பாக் கூழினை
ஏற்றி ஓடிய அவ்ரோப்பீ வண்டியில்
போனவர் மிகப் புனிதரோ புன்மைசேர்
கொலைத்தொழிலர், அவர்கள் பாற்கருணையோ
மான வீரர் நொறுக்கினர் அவ்ரோ என
மக்கள் கூடி ஆர்ப்பரித் தாடினர்.

கல் எறிந்தும் விழுத்துவோம் எட்டினால்
கண்படா தெட்ட உயரப் பறந்ததால்
சொல் எறிந்து சபித்ததும் பலித்ததே!
சொத்துப் பத்துச் சுகமெலாம் அழித்ததும்
செல் எறிந்து உதிரங் குடித்துப்பேய்ச்
சேட்டை விட்ட சுடலைக் குருவியை
பல்உடைத்து இறக்கை சிதறிடப்
பாரில் வீழ்த்தினர், பரணியிற் பாடுவோம்.

கனக விசயன் முடித்தலை நெரித்திடக்
கல்சுமந்த காலம் அக்காலமும்,
இன உணர்வுள இராசரா சேஸ்வரன்
இந்துமாகடல் ஆண்ட பொற்காலமும்
புனைகதை எனப் போனபின், தமிழர்கள்
பொற்பிழந்து கூலிகள் ஆன பின்,
தலை நிமிர்த்தினர் விமானங்கள் இரண்டினை
தரை விழுத்திய தம்பிதன் ஆற்றலால்



தமிழர் நாட்டினர் தாமும் புலியெனத்
தருக்கும் வீரத்தைப் பெற்றனர்; புலிப்படை
இமிழ் திரையெறி கடலிலும் தரையிலும்
இன்று வானத்தும் போரிடும் வீரராய்
புவியனைத்தும் புகழ்கின்றார்; கேட்டுடல்
புல்லரித்தது புலவீர்காள்! பாடுமின்,
இனிஒருவன் தமிழன் அடிமையாய்
இருந்திடான் எனப் பரணியைப் பாடுமின்!

கண்ணுதற் கணை முப்புரஞ் செற்றது;
கனைகடல் வற்ற வேற்படை சென்றது;
விண்ணிருந்து பொழிந்து எமதுயிர்
வீய; வீடுகள் தீப்பட; கோவில்கள்
எண்ணிலாப் பொருள் பண்டங்களென்றிவை
இற்றொழித்த அரக்கர்தம் வான்படைக்
கண்ணிலாக் கரும் பேய்கட்கு விண்ணிலே
கணைவிடுத்த பிரபா கரன்புகழ் பாடுவோம்.

# அவ்ரோ இனி வருமோ?

*ந. வீரமணி ஐயர்*

வானே நெடும்முகி லூடுபறந்துமே
வண்டமிழ் ஈழமண்ணில்
ஈனக்கொடும்படை ஊர்திஉலாவியே
எண்ணரும் குண்டெறிந்தே
மோனத்தமிழீழ மோகனமாந்தரின்
ஆவிகள் வீடுகளை
ஈனஇரக்கமு மின்றிஅழித்தஅவ்
அவ்ரோ இனி வருமோ?

கற்றார்வாழ்பயிர் கல்விச்சாலைகள்
கோவில்கள் வீடுகளைப்
பெற்றோல் குண்டுகள் பொழிந்தே அழித்துப்
பெரியோர் குழந்தைகளை
உற்றார் உறவினர் கதறிடக்குண்டுடன்
உலவிய விமானங்கள்
இற்றமிழீழ மண்ணில் மடிந்தன
அவ்ரோ இனிவருமோ?

வீரவரிப்புலித் தீரப்படையணி
விண்ணினைக் கிழித்திடவே
சார ஒலிக்கதிர் ஏவுகணையினால்
சாடிவிழுத்தினரே !
கோரக்கொடியவர் கொலைகளைப்புரிந்தவர்
ஈழமண்மீதினிலே
கூவி விழுந்தனர் ஆவிமுடிந்தனர்
அவ்ரோ இனி வருமோ?



அத்துலத்முதலி அவ்ரோஏறி
ஆலயமீதினிலே
எத்தனை எத்தனை பெற்றோல் குண்டுகள்
எறிந்தான், அவன் எங்கே?
முத்தமிழ் ஈழ மண்ணினை மீட்க
மூண்டெழும் அனற்கண்ணால்
வித்தகப்புலியின் தலைவன் பார்த்தான்
அவ்ரோ இனி வருமோ?

விண்ணையும் சாடுவர் வீரப்புலி எனும்
திண்மையை உலகறியும்
உண்மையை நாட்டிட ஊர்தியை வானிலே
ஒழித்து வீழ்த்தினரே!
வண்ணவரிப்புலி வீரத்தைக் கண்டுமே
வியந்து இவ்வுலகம்
திண்ணம் நம்நாடு திருத்தமிழீழம்
திகழ்வது திடவுறுதி.

# வெற்றியின் சிகரம் ஏறியது அறமே!

*ச. வே. பஞ்சாட்சரம்*

காலாட் படைமுடக்கி
கடற்படையைக் கட்டிவைத்து
மேலால் பறந்தழிக்கும்
விமானங்கள் படை நொறுக்கி,
வெற்றியின் சிகரம் ஏறியதறமே!
சுற்றிடத் தலையும் துவண்டதுமறமே!

பழுத்தவளாய் யுத்தத்தைப்
பழித்தவளே முடிசூடிக்
கொழுத்தவளாய்க் கொக்கரித்து
கொலைப் போரை ஊக்கியதால்
(வெற்றியின்)

தாம் பழித்த தர்மந்தான்
சாடிற்றென் றுணராமல்
'சாம் செவிணா' 'ஸ்ரிங்கரா'
என எதிரி தலைகுழம்ப
(வெற்றியின்)

சாப்பாடு தடுத்தெம்மைச்
சாகடிக்க நிற்பவரே
சாப்பாடு தடைப்பட்டுச்
சம்பலுண்டுஞ் சாம்படியாய்
(வெற்றியின்)



ஆட்டிறைச்சி விமானங்கள்
ஆளிறைச்சி தந்தெரிய,
போட்டகுண்டு விமானங்கள்
பொடி, துண்டு மழை பொழிய,
( வெற்றியின் )

அந்நியனின் கொடுக்கை நம்பி
அவிழ்த்தெரித்துக் கொய்யகத்தை
இன்னலுற்றுத் தடுமாறும்
லங்காமாதா நடுங்க
( வெற்றியின் )

சொற்றிறம்பாக் கற்பரசி
தூயவிழி பட்டதனால்
பற்றியிரு விமானங்கள்
பாழ்த்தனவோ எனச்சிரிக்க
( வெற்றியின் )

புற்றுநோய் இனவெறியைப்
பூரணமாய்ப் பற்றியது
முற்றுமுழு தாயிங்கே
முகிழ்க்குமினித் தமிழரசு !
( வெற்றியின் )

# தெய்வக் குஞ்சு

*முருகையன்*

"ஜீவிரக்கம் இல்லாத கொடுமைப்பித்தர்
இளந்தமிழர்" என்றெல்லாம்
இகழ்ந்தாளாமே!

கூவி வந்த குண்டுருட்டிப்
பீப்பா கொட்டிக்
கும்மாளம் - நாள்தோறும் போட்ட வேளை
சீவியத்தைத் துண்டாடி,
தலை தறித்து,
சிதறு சன்னம் பறக்க விட்டு,
மார் கிழித்து,
தூவியதார் கொடுமைகளை - இந்த மண்ணில்?
துரைகளது திருவருளை
அறியார் யாரே?

'சளசளத்த' கதை பறைந்து,
மெழுகிப் பூசி
சாந்தி என்ற மந்திரத்தை
உரப்பாய் ஓதி
களவு வைத்தே - அடி நாக்கில்
நுனி நாக்காலே
கருணாவை மயித்திரியைப் பசப்பிக் கொண்டால்
இழுவலுக்கும் நழுவலுக்கும் இடமிருக்கும்;
இழுத்தடிப்புக் கொளுவலுக்கும்
பயன் கிடைக்கும் என்று



பார்த்திருந்த
பாசாங்கு வெற்றி பெற
விடுவார் யாரே?
முந்த நாள் ......
பெரும்பறவை இரண்டைச் சுட்டு
முடித்து விட்டார் இளந்தமிழர்
என்பதற்காய்
அந்தகோ,
அனே,
அம்மே,
தாத்தே! என்றே
அலறுகிறாள் அவள் பிள்ளை
சுற்றம் காக்க,
இந்தவாறே எதிர்ப்புத் திறனைக் கூட்டி
யாழ்ப்பாணம் அண்ணாந்து பார்த்ததென்றால்
நொந்து போய்த்
தளதளத்துப்
பரபரத்து
நொட்டை சொல்லத் தொடங்கி விட்டாள்
தெய்வக் குஞ்சு!

# ‘அவ்ரோ’ இழந்த அரசு புலம்பல்

*பண்டிதர் வீ. பரந்தாமன்*

செய்யாத தவஞ்செய்து
    தேசமெல்லாம் ஓடெடுத்து
கையேந்தி பெற்றவுங்கள்
    கடன்தீர்க்கு முன்பாக

வெய்ய புலிவீரர்
    வெடிபட்டு மாண்டீரோ
மெய்சிதறி மாண்டகதை
    மெய்யதுவோ; பொய்யாமோ

ஒத்துப் பேசியது போல்
    ஒருவரின்பின் ஒருவராய்
செத்து மடிந்திடவே
    செய்தபிழை ஏதறியேன்

உடன்பிறந்த முத்தல்லோ
    ஒருகொடியில் காயல்லோ
படலை கடந்துபோய்
    பகை நிலத்தில் வீழ்ந்தீரோ

உடல்சிதறி மாண்டதென்று
    ஊரவர்கள் சொல்லுகிறார்
குடல் சிதறக் கொன்றபழி
    குறித்துமக்கும் ஆயினவோ

பகலெறிக்கும் நிலவல்லோ
    பால்நிறத்துச் சங்கல்லோ
முகவழகும் மெய்யொளியும்
    மூச்சழகும் காண்பதென்றோ



ஈழமண்ணைச் சுட்டெரித்தே
　　எம்பிள்ளை மீளுமென்று
நாளும் பொழுது நாம்
　　நம்பியிருந் தேமாந்தோம்

வாழும் பருவமல்லோ
　　வண்டடியாப் பழமல்லோ
கோளுரைத்தே உம்மைக்
　　கொன்றொழித்துப் போட்டாரோ

உள்ளிருந்தோர் கூடவொரு
　　உற்றகதை சொல்லவில்லை
பொள்ளல் விழுந்தபின்னே
　　புறத்தில்தீப் பற்றினதோ

சுட்டு விழுத்த நீர்
　　சுருண்டு விழுகையிலே
எட்டுத் திசையதிர
　　ஏங்கி அழுதீரோ

பீய்க்குண்டு போட்டவுங்கள்
பிழைமுழுதும் நெஞ்சிருத்தி
வாய்க்கரிசி போட்டின்று
வன்பழியைத் தீர்த்தாரோ

பள்ளிப் பிள்ளையென்றும்
பால்குடிக்கும் குழவியென்றும்
எண்ணிப் பாராமல்
எவ்விடமும் போட்டீரோ

தாயென்றும் சேயென்றும்
தள்ளாடும் கிழமென்றும்
ஏய குமரென்றும்
எண்ணாமல் பெய்தீரோ

முற்பகலில் செய்தவினை
பிற்பகலில் விளையுமென்று
கற்றவர்கள் சொன்னமொழி
கண்முன்னே நடந்ததுவோ

சாம்பலதும் பார்க்கவில்லை
சாக்கடனோ செய்யவில்லை
தேம்பியழ விட்டுநீர்
சென்றதெங்கே சொல்லீரோ !

# ஆகாய வீதி நமதாக்கி...

*நம்பியாரூரன்*

இவறிப் போனதொரு வானூர்தி போலும்!
வரும்புகையும் யந்திரத்திற்கோளாறால் போலும்!
விழி அகலத் திறந்தபடி விண்ணோக்கி நின்றேன்;
தீப்பிழம்பு! வெடித்து 'அவ்ரோ' விழுவதனைக் கண்டேன்!

செய்தவினை சூழ்ந்ததுவோ! இதுதானே எங்கள்
தேசமெலாம் குண்டுகள் போட்டழித்த யமன் ஊர்தி!
எய்தவனும் போகின்றான், போகின்றான் சிதறி
என்றெழுந்து துள்ளினேன், இது கனவோ, நனவோ!

காற்றோடு வந்தது அந்தச் செய்தி; எங்கள்பொடியள்
கைவண்ணம் இவ்வண்ணம் 'அவ்ரோ' வைச்சாட
கூற்றுவர்கள் ஐம்பத்து மூவரும் கூட்டோடு
குப்புறவே வீழ்ந்தார்கள்! கொண்டாடு தமிழா!

வீடென்ன, பள்ளியென்ன, கோயிலென்ன, 'அவ்ரோ'
வீசியது ஆயிரத்துக் கதிகமெனக் கணக்கு!
போடென்று மேற்பார்வை செய்தவனும் போனான்!
புலிகளது முகாமென்று புலம்பியவன் போனான்!

சிங்களத்தின் வான்படையில் ஐம்பதுபேர் செத்தால்
தேசமெலாம் ஒப்பாரி! மேநாளும் ரத்து!
எங்களது தமிழ்மண்ணில் எத்தனைபேர் செத்தார்!
எந்நாளும் சாவீடு! - இதனை நினைத்தாரோ?

ஆள்வோர்கள் இடும்பணியை ஒழுங்காகச் செய்து
அவர்காலைப் பிடித்து, அவர்கள் தருவதனைப் பெற்று
வாழுகிற தமிழினத்தில் இப்படியோர் வீரம்
வந்தவாறு எவ்வாறு என்று ஆராய்ந்து பார்த்தால்

நீண்டதொரு வரிசையெங்கள் கண்ணில் நிழலாடும்!
நிலம்பறித்த தேசபிதா, மொழிபறித்த பண்டா,
ஆண்ட பரம்பரை 'அம்மா', ஜே. ஆர்., பின்
பிரேமா
அவர்கள் வழி 'அக்கா', என்று ஆளமுனைந்தவர்கள்

எல்லாரும் ஏய்க்கநாம் இளிச்சவாய்த் தமிழர்
ஆயிருந்தோம்; சினவேங்கை ஏந்திய துப்பாக்கி
சொல்லாத செய்திகளைச் சொல்லியதும் அவர்கள்
துக்கத்துக்கு இடையூறு, துள்ளி எழுந்தார்கள்!

தென்னையிலே தேள்கொட்ட பனையில் நெறிபோடும்
சிங்களவர் அடிப்பார்கள், உடைப்பார்கள், எரிப்பர்!
என்னுமொரு வரலாற்றை அடியோடு மாற்றி
எழுதியது புலிபுதிய வரலாறு என்றதுமே

"தாயகமா உங்களுக்கு? தருவோமா?" என்று
தமிழ்மண்ணைத் துண்டாடி வெலிஓயா படைத்தார்!
"போரென்றால் போர்" என்று மார்தட்டினார்கள்
"புலியென்ன செய்யும்?" எனப் பொழிந்தார்கள்
குண்டு!

கடலடைத்தார், தரைப்பாதை அடைத்தார், நாம்
குடிக்கும்
கஞ்சியையும் பறித்தார், ஷெல் இரவெல்லாம்
அடித்தார்!
படநேர்ந்த துன்பங்கள் சொல்லில் அடங்கா - "இப்
பழிஎங்கு போய்க்கழுவு வார்"? என்று
நினைத்தோம்!

அம்பிட்ட பேர்களிலே மீண்டோர் எத்தனைபேர்!
அநியாயம் தொடருதென ஆயாசம் கொண்டோம்!
கும்பிட்டகைகளையும் வெட்டியவன் போனான்!
குழந்தை குட்டிகளைக் கதறச் சுட்டவனும்
போனான்;

''போனானா? போவானா? ஒருபோதும் போகான்!''
போனானே அப்பாவி! போக்கறுந்து போவான்!
தேனான செய்தியிது கொண்டுவந்தோன் வாழ்க!
திருநாட்டைச் சிதைத்தவர்கள் சிதறி ஒழிந்தார்கள்!

காவோலையிற் குளவி கட்டும் ஒருகூடு!
காணாது ஏறிவிட்டால் குளவிகொட்டும் - சாவு!
அமாவாசை இரவில் ஒரு பந்தத்தோடேறி
அதைச்சுடுவர் பிறகு அருகில் குளவி பறவாது!

'அவ்ரோ'வைக் குறிபார்த்துச் சுட்டதெந்தக்கைகள்?
தமிழச்சி வீரப்பால் குடித்தவன்றன் கைகள்!
செவ்வானில் சித்திரங்கள் தீட்டியதெக் கைகள்?
செந்தமிழ்த்தாய் கண்ணில் ஒற்ற முந்துதிருக் கைகள்!

தென்னிலங்கை வானூர்தி சுட்டதெந்தக் கைகள்?
தேசவிடுதலைக் கொடியை நட்டதிருக்கைகள்!
அன்னையர் நெஞ்சினில் மூட்டி வளர்த்த தெந்த
நெருப்பு?
ஆகாய வீதி நமதாக்கி வைத்த நெருப்பு!

பாடுபுதுப்பரணி எங்கள் வேங்கைகளைப் போற்றி!
பாதையெலாம் வாழைநடு, தோரணங்கள் தூக்கு!
ஆடுபுதுக் கூத்து, முரசு அடி, சங்கம் ஊது!
அடிவானில் ஒளிக்கீற்று, பொழுது விடிகிறது!

# வானமும் எம்வச மானதே!

*புதுவை இரத்தினதுரை*

விண்ணி னூர்தியை வீழ்த்தினர் எங்களின்
வேங்கைகள்; எனும் சேதியைத் தாயகம்
கண்ணி லொற்றிடக் கண்டனம். தமிழர்கள்
களிப்பு மேலிடக் கூத்திடப் பார்த்தனம்
எண்ணி யெண்ணி மகிழ்ந்தனர், வார்த்தைகள்
ஏது மற்றுமே குதித்தனர். எம்விழிப்
புண்ணியம் இது; போதுமிப் பூமியில்
பிறப்பெடுத்தற் கேயிது போதுமாம்.

வானிலேறியே வந்தநம் பகைவனின்
வலிய இரும்புக் கழுகதை நிலமுளோர்
காணச், சுடுகுழற் தீயினாற் சுட்டுமே
கவிழச் செய்ததை மண்ணிடை வீழ்த்திய,
மான வேங்கைகள் வாழுமெம் தாயக
மண்ணிலோர் பிடி அள்ளுக; தமிழனே!
வீர மண்ணடா, வேங்கைகள் கால்படும்
விந்தை மண்ணடா, மேனியிற் பூசடா.

நிலமு மெம்வச மானது; எங்களின்
நீல ஆழ்கடல் எம்வச மானது
நிலவு ஏறிடும் வானமும் எம்வசம்
நின்று நடந்திடும் காலம்வந் தானது
பலமு மெம்வச மானது; எம்பிர
பாகரன்வழி வேங்கைகள் பாயுது
விழுந்தழிந்தன எதிரிவான் ஊர்திகள்
விரைவிலேதமிழ் ஈழம் மலர்ந்திடும்.

# நானே விழுத்திய நடப்பு

*புதுவை இரத்தினதுரை*

அதிர்ஷ்டம் எப்போதும் என் பக்கமில்லை
என்றாலும்
அன்று என்னோடிருந்தது.
அப்போது இராஜவீதியில் இருந்தேன்
வானத்தில்......
மின்னலடித்தது.
மேலே பார்த்தேன்
காலையில் யாரோ கதைத்துக் கொண்டது
காதில் உறைத்தது.
''விசயம் விளங்கியது''
ஆகாய ஊர்தியை
தமிழன் சுட்டு விழுத்துவதை
பார்க்கும் பாக்கியம் சித்தித்தது.
மேனிச்சுமை குறைந்து மிதந்தேன்.
காற்றில் கைவீசி நடந்தேன்.
முகிலைக் கடந்து நிலவைத் தொட்டேன்.
என்ன நடந்தது என்னில்?
அசாதாரணம்தான்
என்னால் முடிந்தது அப்போது
சுட்டது நானில்லை
சுட்ட இடத்திலும் நானில்லை
நானே விழுத்திய நடப்பு எனக்கு
என் இளவல் ஒருவனாலும்
இயலுமென்பதே
என்திமிர்.
இனி எவருக்கு நேரேயும் நிமிர்வேன்
அந்நாளில் நானும் இருந்தேன்
என் ஜீவிதத்துக்கும் அர்த்தம் உண்டு
அதுபோதும்.

# வரைகோடு

*அ. யேசுராசா*

சித்திரை 1995

படமொன்று நாளிதழில் .....
வானத்து இராட்சதன்
வீழ்ந்த சிதைவுகள்.
எத்தனை கூட்டம்
எத்தகு மகிழ்ச்சி!
நினைவுச் சின்னமாய்.....
சிதறல்கள் எடுக்கும்
பெருமித முகங்கள்!

வெளிச்சக் குண்டாய்
வெடிக்கும் ஒருநினைவு -

ஆவணி 1977

எரிந்து கிடந்த 'யாழ்'
பேருந்து நிலைய
கடை வரிசை.
வளைந்த கம்பிகள்
குவிந்த சாம்பல்;
உயரத்தில் தொங்கிப்
படபடத்த,
விளம்பரத் தகரம்.
இயலாமை நிறைந்த
எங்களின் முகங்கள்.



''பொலிஸ்......!''
சத்தங் கேட்டால்
ஓடத்தயாராய்,
சைக்கிளைப் பிடித்து
நின்ற நாங்கள்!

சாம்பலில் தொடங்கிய
வரைகோடு
உச்சப் புள்ளியைத்
தொட்டதெப்படி?

''மாறியது காலம்!''
இல்லை -
மாற்றினர் புலிவீரர்!

# எழுச்சி

*சசிவர்ணன்*

அன்று வேங்கைகள்
அடித்த அடியிலே
அவ்ரோ மட்டுமா
தகர்ந்தது?
அரசின் செறுக்கு
ஆதிக்கமுனைப்பு
ஆள நினைத்திடும் ஆணவம்
என்னவும் செய்யலாம்
என்ற புளிப்பு
ஈழத்தை நசுக்கலாம்
என்னுங் கணிப்பு
இவை யாவுமே
அன்றுடன் அழிந்தன!
எம்மைப் பிடித்த பிணி
எம்மைப் பிடித்த தளை
என்பவை கூடவே
அறுந்தன! - இனி
தமிழ் ஈழத்தை
அசைத்திட முடியாது!
தரணியில் எழுந்தது
புதுநாடு!



# இனி என்ன?

ந. கிருஷ்ணசிங்கம்

பதினாறு மணிநேர இடைவெளியில்
அதிஉயரத்தில் பறந்த அவ்ரோ இரண்டை
எதுவித இடையூறுமின்றி
புலி சுட்டு வீழ்த்தி
புதியதோர் வரலாற்றை நிலைநாட்டியது.

பாழ்பட்டு பற்றி எரிந்து
படைத்துறை வல்லார் கருக;
தாழ்ந்து "தடாரென" வீழ்ந்து
தமிழீழநிலத்தில்
தாறுமாறாய் அவ்ரோ விமானம்
அழிந்ததுகண்டு .....
ஆடினர்! பாடினர்!
ஓடியங்கே குழுமினர்!
தேடிப்பிடித்த துண்டை
எடுத்துவந்து
வீட்டில் வியப்புற வைத்தனர்!

உருவங்கள் வளர்ந்து
ஒருநாளில் தமிழீழத்தார்
உயர்ந்து .....
நெடும்பனையின் உச்சியைத்தொட்டு
நிமிர்ந்து நின்றனர்!

நீலவான் தமக்கென்று
வலம்வந்து பீப்பாக் குண்டுகளை
வாரிஇறைத்த "பிளேன்"!



நாட்டை அழித்து
நிணமும் சதையும் எலும்புகளும்
படையல் செய்த ''பிளேன்''
உடைந்து நொருங்கி
எரியுண்டு கருகவென
எங்கள் தலைவனின்று
ஆணைதந்தான்!

பறந்து பலநாடும் சென்று
படைக்கருவி கொள்வனவு செய்து
பெரும்படை நடத்த எண்ணி
அரும்பாடுபட்ட அம்மா
சந்திரிகா!
துரும்பாகிப் போனார்
துயரத்தாலின்று!

துடைத்தெடுத்து வானம்
தூய்மையாய்த் தெரிகிறது!
இனி என்ன?

# இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது ?

இளையவன்

நேற்றுவரை எம்மை
முற்றுகையிட்டிருப்பதாய் முழக்கியவர்
முற்றுகைக்குள் இன்று
முடங்கிப் போனதாய் முனகும்

இந்த அதிசயம்
எப்படி நிகழ்ந்தது?

எங்கள் தலைகளில்
எச்சமிட்ட இரும்புப் பறவை
எங்களின் மண்ணில்
பொசுங்கிச் சரிந்த ......

இந்த அதிசயம்
எப்படி நிகழ்ந்தது?

பறவையின் நிரையென
வானிடை எழுந்த
பகைவனின் ஊர்திகள்
சிறகுகள் ஒடிந்திட
மண்ணில் விழுந்த

இந்த அதிசயம்
எப்படி நிகழ்ந்தது?



போத்தல் வாயினுள்
புலிகளை அடைப்பதாய்
போட்ட திட்டம்
பொத்தல் விழுந்திடப்
பகைவர்கள் புலம்பும்

இந்த அதிசயம்
எப்படி நிகழ்ந்தது?

ஆழக் கடலின் மடியில் ஊர்ந்தும்
நீல வானின் முகட்டில் இடித்தும்
விடுதலைப் புலிகளின் விசுவரூபம்!

நீருக்கு அடியிலும் நெருப்பை மூட்டவும்
வான வீதியில் ஏறி நடக்கவும்
வல்லமை வாய்த்தது வலிமை சேர்ந்தது!

ஆற்றல் மிக்க தலைவனுக்கு
வாழ்த்துப் பாடுவோம்!
ஆளுமையுள்ள வீரர்களின்
காலின் தூசியை கண்ணில் ஒற்றுவோம்!



# இறக்கை முளைத்த என் கவிதை

*விவேக்*

ஏப்ரல் இருபத்தெட்டில்
என் கவிதைக்கு
இறக்கை முளைத்தது!
அடுத்த நாட் காலை
அது பறந்தது!
வானின் திசைகளெங்கும்
வட்டமடிக்கிறது
வாவென்றழைத்தால்
வரமாட்டேனென்கிறது.
குத்துக்கரணமடித்து
சாகசம் செய்கிறது
நட்சத்திரங்களைப் பிடுங்கி
என்மீதெறிந்து
நான் திடுக்கிடுகையில்
சிரிக்கிறது
நிலவில் முகம்பார்த்து
தலை சீவுகிறது.

இன்னும் என் கவிதை
இறங்கி வரவில்லை

தமிழா இனியென்ன......
பாயை விட்டெழும்பு
வயிறு வெடித்துக்கிடக்கும்
வல்லூறுகளைப் போய்ப்பார்.
குடலை அறுத்து,
குருதி குடித்தலைந்த
உயிர்கொத்திப் பறவைகளின்
உடலத்தைப் பார்க்க
உன்விழிகளுக்கு இப்பிறவியில்
கிட்டிய வரமிது
தவறவிடாதே!
கடலின் ஆழத்தில் காலூன்றித்,
தரையெங்கும் பரவி, விரிந்து
விண்ணை முட்டி எழுந்த
வேங்கைகளைப்பாடு
வீரத்தின் வேர்களுக்கு
நீரூற்று.

கணை தொடுத்த கரங்களைப் பற்றி
கண்களில் ஒற்று
தொல்லைக் கதைகள்
பேசித்திரிவதை இனி நிறுத்து
தொலைப் பார்வையற்ற
மங்கல் விழிகளைக்கழுவு
துள்ளும் உன்பிஞ்சுகளுக்கு
தோள்கொடு
நாளிதழ்களில் விடிவைத்தேடும்
நடப்பை மற
நாளை உன் பிள்ளை அதை
வாசலில் வந்து தருவான்
நம்பு; அதனை
நாட்குறிப்பில் எழுதிவை!

# பாவங்களின் கூடுகள்

*கருணாகரன்*

பாவங்களின் கூடுகள் எரிவதைக் கண்டேன்
சாபங்களும் திட்டுதல்களும்
வாங்கிப் பெற்ற நரகப்பிறவிகள்
நிணமாகிச் சிதறிப்போன செயல் பார்த்தேன்
நாலு சிறகெழுந்து
பறந்து
பரவசமடைந்தேன்.

ஒரு பிறவியின் சாவுகண்டுனக்கு மகிழ்ச்சியா
என்றென்னைக் கேட்கலாம்;
கேள்; நன்றாகக் கேள்.
அதுபற்றி எனக்குக் கவலையில்லை
நான் சாவில் வேகும் போதென்னை
கண்திறந்து பாராத உன் கேள்விபற்றி
எனக்கென்ன கவலை?
நான் புளுகித் திரிவேன்.



கெந்திக் கெந்தி நாளோடும் போரதெனது
உயிர்தேடித் தேடிவந்த பாவங்களின் கூடுகள்
இன்று அழியுண்டு போவதைப் பார்த்தேன்.

அஸ்திரங்கள் ஏவிய என் தேவகுமாரர்களின்
வெற்றியின் கதைபற்றி உரத்துப் பாடினேன்
நன்றியின் உதிரம் கலந்த என்பாடல்
திசையெல்லாம் பரவியது
நான் பாடிப் பாடி மகிழ்ந்தேன்.
வெற்றியின் பூரிப்பில் சிரித்தேன்.
நரகப் பிறவிகளின் சாவில் நான் சிரித்தேன்
நானழுத காலங்களை விழுங்கும்
இந்தச் சிரிப்பு.

இப்போது நான் சிரிக்கிறேன்
என்னுடைய சனங்களும் சிரிக்கிறார்கள்
பாவங்களின் கூடுகள் பற்றி யாருக்குக் கவலை?
யாருக்கடா கவலை?

# வீரருக்கு வரவேற்பு

*இயல்வாணன்*

விமான எதிர்ப்புப் பிரிவு
வீரர்கள் வருகிறார்கள்
பெருமிதம் தொனிக்க.

விழிப்பிருந்து இப்போது
இரண்டு விமானங்களை
விழுத்தியிருக்கிறார்கள்;
சற்று ஓய்வெடுக்க வேண்டும் அவர்கள்.
அதற்கு முன்,
அவர்களுடன் சேர்ந்து
'' இனி அச்சமில்லை ''
பாடிக் களிப்போம்.
புண்சுமந்த
மண்ணின் துகள்களைப் பூசி
ஆர்ப்பரிப்போம்.
ஒன்றாய் விருந்துண்போம்.
இனி,
விமானம் வீசிய குண்டுகள்
எப்படியென்பதற்கு
சில மாதிரிகள் தேவை;
எங்கள் நூதனசாலைக்கு
அதையும் சேகரிக்கச் சொல்வோம்
அவர்களிடம்.
அதன்பின் ஓய்வெடுக்கட்டும்;
அடுத்த வெற்றிக்காக
விழிப்பிருக்க வேண்டும்.



# அம்மாவின் தூக்கம்

*கி. சிவஞானம்*

ஓர் இனிய விடிகாலைப் பொழுதின்
இளமைக் கனவுகளாய்
வானம்
நிசப்தமாய்
சந்தோசமாய் இருக்கிறது!

நித்திய தூக்கத்திற்கான
பேயின்
தாலாட்டுக்களின்றி
என் அம்மா
நிம்மதியாய் தூங்கிப் போனாள்.

பூமியின்
காதுகளைச் செவிடாக்கி, அதன்
துடிப்பை ஒரச்சில்
நிறுத்த முனையும்
அறைவுகள்



எதுவுமின்றி எல்லாம்
எல்லாமே
அமைதியில் குளிக்கின்றன
என் அம்மாவைப் போல!

சண்டைக்கால வானத்தின்
ஒவ்வொரு அதிர்விலும்
உயிர் குறுகி
மனம் மெலிந்து
சூனியக் குழியின்
இரவுகளில் தூங்காதிருந்த
என் அம்மா
இப்போதிங்கேயோர்
தாமரைப் பூவாய்
தூங்கிப் போனதெங்ஙனம்?
இது எவ்வாறாகிற்று?
தூரத்தே அவள்
தூக்கம் கலைக்கும்
எதிரியின் வேட்டொலிகள்
... ... ......
...... .........
அவனும் அவையும்
இல்லாதொழிக!
நாளையோ மறுநாளோ
அதுவும் அவ்வாறேயாகும்.



# சாபங்களின் பலிதம்

*சத்துருக்கன்*

எரிமலையின் உச்சியை
ஏறிக் கடந்ததென
மனது பூரித் தெழுகிறது

வானத்தில் என்ன அதிசயம் நிகழ்ந்தது?
என்றும்
இரை தேடியபடி
காற்றை உதைத்து
அலைந்து திரிந்த கொடிய பறவைகள்
வாய் பிளந்து, உடலெரிந்து போனதென்னே!

சாபங்கள் பலித்துவிட்டன;
ஒன்றன் பின் ஒன்றாய்
எரிந்து வீழட்டும் அவை.

இனி,
பறவைகளின் எச்சமில்லை
என்போம் அச்சமின்றி.



# சின்னப் புலிவீரனுக்கு!

*ஆதிலட்சுமி சிவகுமார்*

வானத்தை எங்களின்
வசப்படவைத்த சின்னப்புலிவீரா,
குடியிருந்த கோயில் இழந்து……
சிறுகச் சிறுகச் சேர்த்த
சொத்தும் இழந்து……
கொற்றம் சாய்ந்த கோனாய்
இரவல் கோடிக்குள் அகதியாய்வாழும்
இந்த அன்னையின் ஆசிகள்!
'பிளேன்'களைச் சுட்ட உன்
பிஞ்சுக் கரங்களைக் காட்டு;
மென்மையாய் ஒருதரம்
முத்தமிட விரும்புகிறேன்!
உன்வயதுதான் இருக்கும்
என் மூத்தவனுக்கு……
பழஞ்சோறூட்டி …
வகிடெடுத்து தலைசீவி …
வாசப்பவுடர் பூசி……



வாசலிலே போய் சகுனம்பார்த்து......
வழியனுப்பி வைத்தேன் பள்ளிக்கு!
சிலமணித்துளிகள் தான் சென்றிருக்கும்......
மேகம் நடுநடுங்க... முகடுபிரிய .....
பூமி அதிர்ந்தது!
சிதைந்த உடல்.....துண்டுதுண்டாய்......
கைகளும் கால்களும்......காலையில்
ஊட்டிய சோற்றுப் பருக்கைகள்கூட
உதிரத்தில் நனைந்து கிடந்தன!
கதறித்துடித்தேன்......கண்ணீர் சொரிந்தேன்!

நேற்றுமாலையும் ...இன்றுகாலையும்..... நீ
சுட்டுவீழ்த்திய விமானங்கள்
சுவாலை விட்டு எரிந்தபோது......
சத்தமிட்டுச் சிரித்தேனடா......
சிதறிச் செத்த என் செல்வம்
உயிர்த்தெழுந்து வந்ததுபோல்
உணர்ந்தேனடா... மீண்டும்
உனக்கு என் ஆசீர்வாதங்கள்.

# இனியென்ன...
# காற்று எம்பக்கம்

*சுதாமதி*

குண்டு சுமந்து வந்த
கோரக் கழுகின்

இறக்கைகள் உதிர்ந்தன.
சோழகத்தில் சுழன்றடித்த
சருகாக
எங்கள் அருகுவந்து வீழ்ந்தன.
இங்கெம் தலைகள் நிமிர்ந்தன.

நேற்றுவரையும் புகைமூடியவானம்
நீர் திரண்டு
நிலம் நனைந்தது.

நெஞ்சு புரைய
வான்பார்த்த விழிகள்
வியப்புக் கொண்டன.

எங்களது வானம்
எங்கள் கடல்கள்
இவைமீறி எவர் வரினும்
தம்பிபடைகள் தப்பவிடாது.

மீண்டும் ஒருமுறை
வரலாற்று வரிகள்
சிறகை விரித்து,
வானில் கூத்தாடின.

முன்வந்த கழுகு வீழ்த்தி
எமக்குள் கூத்தாட
வரும் அடுத்த விசாரணைக்கென
எம் தலைவன் சொல்லியவார்த்தை......



எண்ணிரண்டு மணிநேரம்
மீண்டுமோர் வெடி அதிர்ந்தது.
வானில் எங்களது கொடி பறந்தது.
காற்று நிலமதிர
கரிகாலன் படை புகுந்தது.

இது புலிகளின் காலம்
பொங்கி எழு தமிழா!
நம்பிக்கையின் ஒளிக்கீற்று
எங்கும் படர்ந்தது
இனியென்ன?
காற்று வீசிடும்.
தூற்றத் தொடங்குவோம்.

மீண்டும் வானில்
குருவிகள் சிறகடிக்கும்
நிலவின் கதிர்கள்
மண்ணிற் படரும்.

# விமானங்கள் விழுந்து நொருங்கிக் கொண்டேயிருக்கும்

*உதயலட்சுமி*

விமானங்கள் வந்து தினம் வான் பரப்பிலோடும்
குண்டுகள் கொட்டிக் கொக்கரித்தாடும்
மேலெழும் புகையில் மேகங்கள் மறையும்
கந்தக மணத்தினிலே சந்தனங்கள் வாடும்
அந்திப் பொழுதிலும்
அதிகாலையிலும் இது நடக்கும்
நொந்த எம் தாயக வீதிகளில்
தோண்டப்பட்ட குழிகளெல்லாம்
குருதிக்குளம் சுமக்கும்
பிகையொலிக் காற்றைச் சுவாசித்து
இதயம் வெடித்து இறந்தவர்களின்
இறுதிப் பயணமிங்கு அடிக்கடி நடக்கும்

உறவுகள் தொலைத்த பறவைகளாய்
நீர் தேக்கிய விழிகளோடு
வானம் பார்த்து நெஞ்சு விம்மியபடி நின்ற
எம்தேசம் அன்று வாய் பிளந்தது
குண்டு மழைக்குள் குளித்தபடி நிலாவரை நோக்கி
நெஞ்சு நிமிர்த்தியது
வெளிச்சமேறிய இரவுகளைக்



கனவிற் பார்ப்பதைவிட
நிலாவரை சென்று நீறு பூசிக் கொள்ளவே
அது விரும்பியது

இயக்கச்சி வெளியில்
எங்கோ காணாத காட்சியைக்
கண்முன் கண்டு
தன்னை,
ஏவுகணை ஏந்திய ஒவ்வொரு
புலிவீரராய் நினைத்துக் கொண்டு
குதித்தது; கூத்தாடியது
எக்காளமிட்டு நகைத்தது
''இன்றைக்கு ஒன்றுமில்லையோ?''
எதிர்ப்பட்ட எம்முள் ஒருத்தியை
நரைத்த தலை ஒன்று
நிமிர்ந்து நின்று கேட்டதாம்
பிதுங்கிய விழிமாறி
பதுங்குகுழியை மூடிவிட்டு



"இனிமேல் பிளேன் வராது"
பிள்ளை ஒன்று நின்று சிரித்தது
முடங்கிக் கிடக்கும் படை முகாமையும்
முன்னேற முடியாத இயந்திரப் படகையும்
இறகு விரிக்காத விமானத்தையும் பற்றி
அப்புவுக்கும் ஆச்சிக்கும் அடிக்கடி விவாதங்கள்

ஓம்!

தசை தெறிக்கத், தலை பிளந்து கிடந்த
தார் வீதிகளில் எம் தேசம்
கருகிப் போன கழுகுகளைக் கண்டு
கை கொட்டிச் சிரிக்க வேண்டும்

அதற்காகவேனும்!

ஒவ்வொரு புலிவீரரும்
ஏவுகணை ஏந்தியவர்களாயல்ல,
பிரபாகரப் பிரளயத்தின்
பிரம்புகளாகப் பிறப்பெடுத்த
இப்பூமியில்
இன்னும் இன்னும்
விமானங்கள் விழுந்து
நொருங்கிக் கொண்டேயிருக்கும்.

## “அடி” விழுந்த அவ்ரோ!

வேலணையூர் சுரேஸ்

உயர உயரப் பறந்து
தாயவள் பூமிக்கு துயரமிழைத்த அசுரப் பறவை
உச்சிக்கு மேலே உரசித் திரிந்து
எச்சமிட்டு, தேசத்தை எரியூட்டிய ‘கொள்ளிப் பேய்’
ஆகாயத்தில் சிறகடித்து, சிறகடித்து
ஆருயிர்களை......
ஆ; காயப் படுத்திய அநியாயப் பிசாசு
‘நரபலி’ எடுத்த பழியை
நிறையவே சுமந்த குற்றவாளிக் கழுகு
நீதிமன்றில் நிறுத்தி நியாயம் கேட்பதற்கு
பீதியாய்த் தப்பிய உயிர்களும்
இடிந்த சுவர்களும்,
முறிந்த மரங்களுமே சாட்சி சொல்லும்
‘குண்டு சுமக்கும் குருவி’யின் இரைச்சல்
காதை நிறைக்க ஊர் கண்திறக்கும்
வந்த குருவி எச்சமிட்டுச் சென்றுவிடும்.
இந்த மண்ணின் உறவுகள் கூடியழும்.
எந்த நாளும் மரண ஓலம் எழும்.
கற்குவியல் போன்ற தசைக் குவியலுக் குள்ளே
யார், யாரென்று தேடுவதே எமக்கு காலைக்கடன்.

குண்டுக்கு இரையான ' மனித இறைச்சி 'யை
கைகளால் அள்ளிக் கண்ணீரால் கழுவுவதே தொழில்
' உரிமை 'க்காய் உதிரமும் தசையும் நிறுத்தபோதும்
வேர் அறுபடாத விருட்சங்களாய் வாழ்கிறோம்
'' நிலாவரை ''
அசுரக் கழுகு அகால மரணம்
அடைந்த இடம் மட்டுமல்ல
' அடிமுடி ' அறிய முடியாத
புலிகளின் வீரத்திற்கும் அந்த இடம்தான் குறியீடு
' உயர் தலைவன் ' வழியில் வந்தவர்
கையிருந்த கருவி ' குண்டு சுமக்கும் குருவி 'யை
குறி வைத்ததும் பொறி கக்கியது அந்தப் பறவை
ஈரெட்டு மணிக்குள் ' இரு அவ்ரோ '
உயிர்விட்ட செய்தி உலகை எட்டியது
ஊரிருந்தோர் விழிகள் மட்டும்
' உலக அதிசயத்தை ' நேரிருந்து பார்த்தன.
இனிச் சாகலாம் என்பதைத் தவிர
வேறெந்த வார்த்தைகளும் வாயில் எட்டவில்லை
' அவ்ரோ '
அடிவிழும் மட்டும்தான் ஆகாயத்தில்......!
அடுத்த நிமிடம் வானில் மிதந்தது
இந்த மண்ணும், மக்களும் தான்.
காற்றுக்கூட விசிலடித்துக் கேலி செய்தது
முறிந்த மரங்களும், இடிந்த சுவர்களும்
உறவைப் பிரிந்த உயிர்களும்,
நேற்றுத்தான் தலை நிமிர்த்தி கைகொட்டிச் சிரித்தன
கடலலை எழுந்து உடுக்கடித்து
'' கடலல்ல வானும் புலிகளின் கைக்குள் '' என்றது
விடுவோமா இனி ...

# மாற்றம் ஒன்று மலரும்!

*த. ஜெயசீலன்*

வான வானர வல்லவர் எங்கடா?
வட்டமிட்டவல் லூறுதான் எங்கடா?
மான மன்னவர் மூச்சிலே ... தூசென
வந்து வீழ்ந்ததே ..! பார்த்தியா? பொங்கடா!
தானை வீரனின் தாளிடை..... முப்படை
சாய்ந்ததே ! "அடேய்" சங்கு, கொம்பூதிவா
ஈனவாழ்வு இம் மண்ணிலா? இல்லையென்
றேற்று வேங்கை எழிற்கொடி; ஆடடா!

பிச்சை கேட்கவா பேசினோம்? அம்மையார்
பீடு தந்ததாய் பீற்றினார்; வந்துபார்,
நிச்சயமினி நீள்பகை எங்களின்
நிலத்திற் கால்பதித் தாலவர் சாவராம்
எச்சரிக்கையும் செய்தனம்; கேட்டாரோ?
ஏய்க்கலாம் என இந்தியா செல்கிறார்.
அச்சமில்லையென் றஸ்திரம் ஏவுறோம்.
ஆற்றல் கண்டியோ தமிழனே? ஆர்த்துவா.

நேற்றெரிந்த அந்நீசரின் சாம்பலின்
நீறு பூசும் நிலாவரை ... தெற்கெலாம்
கூற்றினுக் கினிக் கூத்தெனும்; எல்லையில்
கொல்பகை இனிக் கூடுமோ? எங்களை
வேற்றவராள விடுவமோ? ஈழமண்
விடியுமட்டும் போரொலி கேட்டிடும்
மாற்றம் ஒன்று மலர்ந்திடும்; நாளையே
மான மண் பிறக்கும்; விழி பார்க்குமாம்!



# வானம் வசப்பட்ட காலைப் பொழுது...

*தெல்லியூர் ஜெயபாரதி*

காலை வழக்கம் போல்
வேளையோடு விடிந்தது.
கோயில் மணியோசை ஓமென்று சொல்லி
எயில் மூவெரித்த இறைவனை எழுப்பிற்று
வீட்டில்,
தட்டிப்பாயில் படுத்த அம்பி தவிர
எல்லாரும் எழுந்து எல்லாம் முடிக்க
மெல்ல மணி எட்டானது.

நீள்வகிட்டு றோட்டில்
கால்பதித்து, பல கதைத்து
பள்ளிக்கு செல்கிற போது
வாகனங்களிரண்டு
பலமாய் முட்டும் சத்தமொன்று
சூரியன் தீப்பற்றி எரிந்தது.
''பிளேன் சரியாம் நவக்கிரியில்''
கிழவரொருவர் நடைபாதையில்
சொல்லக் கேட்டுத் திகைப்பாகி,
மீளப் பூரித்து
''இது எங்கள் பூமி
இது எங்கள் வானம்'' என்றார்.

# பொங்கி வாடா வேங்கையோடு

ஐ. தயாபரன்

அமைதியா யந்த இரவினிலே
தமை மறந்து குஞ்சுகளும் உறங்கையிலே
'அவ்ரோ'வும் வந்து உறுமியது
அவ்விரவே பிஞ்சுகளும் கருகியது.

கற்பாறைகளும் கனலாய் உருகியது
காற்றும் இங்கு வீசாது நின்றது
பார்த்தவர் நெஞ்சம் பதைபதைத்தது
பொறுத்துப் பொறுத்துப் பொறுமையிழந்தனர்.

குனிந்த தமிழினம் எதிரியை குட்டவே
பணிந்த படையினர் ஓடினர் எட்ட - நேற்று
வானிலே வந்து எம் மக்களைச் சுட்டவர் - தமிழ்
மண்ணிலே சதைத் துண்டுகளாய் சிதறினர் இன்று.

தரைப்படை தலைதெறித்தோட
கடற்படை கலங்கியே தவிக்க
வான்படை மண்ணிலே புரள - எங்கள்
புலிப்படை வெற்றிகள் படைக்குது.

பொறுத்தது போதும் தமிழா
பொங்கியே நீயும் எழுந்துவாடா
தமிழீழத் தனியரசு மலர்ந்திட
வேங்கைகளோடு விரைந்திட வாடா!

# நீலவான் எங்களுக்கானது!

*வெள்ளை*

நீல வான் இனி எங்களுக்கானது,
நித்தமே வரும் கழுகுகள் சத்தமும் ஓய்ந்தது -
மொத்தமாய்
தமிழினம் இன்று மகிழ்ச்சியில் பாடுது

பகைவர் சேனையை ஏற்றியே வந்தவன்
பாதி பாதியாய் கிடக்கிறான்.
ஓடுபாதையைத் தேடியே வந்தவன்
ஒரு மைல் தள்ளி வீழ்ந்துமே எரிந்து கிடக்கிறான்
வீழ்ந்தவன் மேனியில் எங்களின் மக்களோ -
ஏறி நடக்கிறார்.

காற்றிலே வந்து எம் கதையை முடித்தவா
எங்கள் பாட்டனை பாட்டியை
பள்ளிக்குப் போன நம் சிறுவரை
ஆட்டினை மாட்டினை
சொந்த வீட்டினை எரித்தவா
வீரமா காட்டினாய்?

வீழ்த்தினர் வேங்கைகள் இந்தத் தாயகம் வாழ்ந்திட,
எங்கள் வானமே வெளுத்தது -
வந்த துயரங்கள் யாவுமே மறைந்தது.

எங்களின் விழிகளே பார்த்திட வீழ்ந்தாயே
பகைவனே! அந்த ஆனந்தக் காட்சியை
நாம் பாட்டிலே பாடுவோம்
பரதங்கள் ஆடுவோம்
எங்கள் தலைவனை வாழ்த்தியே
விடுதலைத் தீயினுள் ஆடுவோம்!

# உன் தேசத்திற்கு ஒரு சேதி சொல்லு...

*வி. பிரபாகரன்*

உனக்கு ...
நேற்றுப் போலவே இன்றும் ஓர் அதிகாலை
புள்ளினங்களின் வரவேற்புடன்
உனக்கு... புரிந்திருக்க நியாயமில்லை
இது உன் இறுதிப்பயணம் என்று
எம் வரலாற்றில் புதியதொரு
காலை என்று .....

நேற்று மாண்டு போன உன் நண்பனின்
மரணவிசாரணைக்காய்
இன்று நீ ... எம்வானில்
அதே அதிகார உறுமலுடன்;
உன் வீரத்தில் உனக்கிருக்கும் நம்பிக்கையுடன்
உன் விதி அறியாதவனாய் .....

நேற்றுவரை நீ ....
அதிகார சிங்களத்தின் கதாநாயகன்
அரக்கர் படைகளின் வலது கரம்
ஈழத்திசைகளில் கட்டுண்டு கிடக்கும்
சிங்களச்சேனைக்கு கேட்டதெல்லாம் கொடுக்கும் காமதேனு
தமிழ் மாந்தர் உயிர் குடிக்கும் கலியுக அரக்கன்.



ஈழத்திசைகளில்
நீ எடுக்கும் அவதாரங்கள் எத்தனை?
உன் சகாக்களின் வேகங்கள் எத்தனை?
நீ சுமக்கும் குண்டுகளின் ரகங்கள் எத்தனை?
உன் அதிகாரக்குரலின் அதிர்வுகள் எத்தனை?
மறக்கவில்லை மறக்கவில்லை......
நேற்றுவரை நீ எமக்கு சிம்மசொப்பனம்!
உன் பார்வையில்......
கோவில்கள் கூட புலிக்குகைகள்
பாலகர் பள்ளிகள் பயிற்சிப் பாசறைகள்
வீதிச் சந்தைகள் ஆயுதக் கடைகள்
வைத்தியசாலைகள் கூட குருதிக்குளமாயிற்று

உனக்கு நினைவிருக்கிறதா ..?
உன் வெறியாட்டத்தில்
நாம் தொலைத்த எம் யாழ்நகரை
பயணப் பாதையில் துடிதுடித்த எம்மக்களை
புதைகுழிகளாகிய பதுங்கு குழிகளை
அங்கங்கள் தொலைத்திட்ட எம் உடன்பிறப்புக்களை
நாம் உறக்கமின்றி கண்விழித்த இரவுகளை

இன்று நீ பார்த்தாயா..... ?
எம்மக்கள் சிரிப்பொலியை,
எம் மழலைகள் குதூகலத்தை,
விடுதலைப்போராய் நீண்டு கிடக்கும்
இரவில் ஓர் சுதந்திர விடிவெள்ளி முளைத்திருப்பதை

உணர்ந்து கொள்.....
தமிழ்மாந்தர் உணர்வுகளை
எம் தலைவன் உறுதியினை
எம் இளைஞர் வீரத்தினை
எங்களது உரிமைகளை

உன் தேசத்திற்கு ஒரு சேதி சொல்லிவிடு
இனி......
எம் ஈழத்திசைகளில்
எந்த வழியிலும் உனக்கு
அனுமதி இல்லை என்று !

## எனது நெருப்பு மேலெழுகிறது

*நாமகள்*

என் குரல் வளையில்
உனது பிடி
இன்னமும் இறுகியேயுள்ளது
நான் அறிவேன்;
தளர்த்துதல் பற்றிய
உனது வாக்குறுதிகள்
வெறும் நாடகமே.
வேதனை மிகுந்த
எனது குரலொலி
தேய்ந்து மறைந்துள்ளது.
விழிகள் பிதுங்கி,
முகம் வெளிறிப்போன போதிலும்
என் சுவாசத்தை நிறுத்தி விட
உன்னால் முடிந்ததில்லை.
உன் பிடியின்
இறுககத்தல்



என்னுள்ளே
அழுத்தம் அதிகரித்து
வெடிப்பு நிகழும்
உன் கால்களின் அருகாக
நான் மூட்டிய நெருப்பு
உன்னை
நெருங்கிக்கொண்டிருப்பதை
நீ அறியாய்
'எச். எஸ். 748'
ஒரு புதிய ஆரம்பமே
நீ பார்த்துக் கொண்டிருக்கையிலேயே
குரல்வளையை
இறுக்கியுள்ள
உனது கைகளிலும்
விரைவாய் தீப்பற்றும்.



# காலம் கனிந்தது!

*மயன் - 2*

29. 04. 1995
03. 15 ஜி. எம். ரி. *
அன்று சனிக்கிழமை.
கச்சேரி - நல்லூர் ரோட்டில் சனமில்லை
கலர்ச்சட்டைகளில் ரியூசன் போகும்
சைக்கிள்காரப் பெண்பிள்ளைகள் மட்டும்தான்.
பேய் விமானம் ஒன்று போகுது தொலைவில்.
வீடொன்றின் கூரையிலிருந்து
மழலைமாறாக் குரல் ஒன்று கேட்கிறது
''புலிமாமா புலிமாமா சுடு ..... சுடு.''
கீழிருந்து ஒருவகைச் சத்தம்
நம்மவர்கள் சுடுகிறார்கள்
உயரம் மிக அதிகம்
படாது
வெருட்டல் மட்டும்தான்.
''புகைக்குது புகைக்குது'' கூவினான் சிறுவன்
பூரித்திருந்தது அவன் முகம்.



சர்வதேச பரிசொன்று கிடைத்திருக்கும்
அதைப் படம் பிடித்திருந்தால்
''உண்மைதானா? ' நான் கேட்டேன்
''ஓமோம் புகைக்குது''
அவசரம் பதிலில் தெரிந்தது
வீட்டுக்குள் ஓடினான், செய்திசொல்ல.
சற்றுப்பின்;
ஊரே கூடிக்கூடிக் கதைக்கிறது
எல்லார் முகத்திலும் மகிழ்ச்சி
'ஸ்கூட்டர்'கள் பறக்கின்றன
'அவ்ரோ' விழுந்த தலம் நோக்கி.
நேற்று 11.15 ஜி. எம். ரிக்கு ஒன்று
இப்போது வேறோர் கொடும்பட்சி
இரண்டையும் கூட்டிக்கழித்துப் பார்க்கையில்,
'அது' - எமக்குக் கிடைத்துவிட்டதுதான்!
நாளை -
இந்த நிகழ்வை
அந்தக் கவிஞனும் [1] அறிந்துகொள்வான்;
நீண்ட தாடியை
நீவிக் கொள்வான்,
உணர்வுடன் பாடுவான்
தன் கவிதை வரிகளை!



''பறவையின் நிரையென
வானிடை எழுந்தன
பகைவனின் ஊர்திகளே
சிறகுகள் துகள்பட
அலைமிசை பறந்தன
தமிழர் கருவிகளே!''

கடைசி வரிகளைத்
திரும்பவும் பாடுவான்.
கவிதை பாடிய போது
கருகருவென்ற தாடி அவனுக்கு;
இப்போது அதில் வெள்ளிக்கம்பிகளும்
இழைந்திருக்கும்.
கவிஞன் ஆரூடம் சொன்னது
பறவைகள் நிரையென ...
இன்னும் அரைவாசித் தூரமிருக்கிறது!

• இறீன்விச் நேரம்

ⅰ காசி ஆனந்தன்



# வான்வெளி இனிமேல் எம்வசம் !

*மு. வே. யோ. வாஞ்சிநாதன்*

பூமியில் இருந்து வானத்தைப் பார்த்து
பொருமினோம்... விம்மினோம் ...ஓர்காலம்! - அன்று
குண்டுகள் தம்மைக் கொட்டியே பறந்து
கொடியோர் கழுகுகள் கோரமாய்ச் சிரித்தன !

நெருப்பு மழையில் நெடுநாள் குளித்து - எங்கும்
நீதிக்காகக் கரங்களை ஏந்தினோம் !
பொறுப்பு வாய்ந்த நாடுகள் கூட......
பாவச் செயல்களைக் கண்டிக்க மறந்தன !

வண்டுகள்போல வந்திடும் வல்லூறுகள்......
குண்டுக ளாலெம் மக்களைக் குதறின !
நண்டுகள் பொந்தில் பதுங்குதல் போல......
நாளும் பொழுதும் நம்மவர் ஒளித்தனர் !

சிறியோர் பெரியோர் ஆண்கள் பெண்கள்
என்றிடும் பேதம் இன்றியே அழித்தனர் !
சன்னத்தால் உடல்கள் சல்லடை ஆகிட - நினைவுச்
சின்னங்கள் எங்கும் செறிந்து எழுந்தன !



விமான எதிர்ப்புக் கணைகள் வருமா ?
வீரத் தலைவன் வான்படை எழுமா ? - என்று
ஆயிரம் கேள்விகள் மக்களின் நெஞ்சிலே
அலைபோல் மோதிட...... அந்நாளும் வந்தது !

விமான எதிர்ப்புப் பீரங்கிப் படையணி
'அவ்ரோ'ச் சிறகினை அடித்து முறித்தது !
சண்டியர் வானில் சல்லடை ஆகிய
சரித்திர நிகழ்வால் செம்மண் சிரித்தது !

'தும்பி'யும் பொம்மரும் வானத்தில் பறந்திட - இனித்
'தம்பி'யின் அனுமதி தப்பாமல் வேண்டும் !
வெம்பிநாம் இனிமேல் வீழ்வது முறையோ ?
வான்வெளி இனிமேல் எம்வசம் அன்றோ !

இனியும் எழுந்திடா திருப்பது முறையோ ?
கனியும் ஈழம் கைகளில் வேண்டாமோ ?
- வானெதிர்ப்பு
அணியில் புதுநடை...... அழகாய்ப் போடவா !
அண்ணனின் தலைமையில் துணிந்து ஓடிவா !

# எத்திக்கும் வந்து வசமாகும் இனி!

*வளவை வளவன்*

கானுறங்கலாம் கலையுறங்கலாம்
கற்றவர்மனங் களித்துறங்கலாம்
மீனுறங்கலாம் நதியுறங்கலாம்
விஞ்சுமாகதிர் தானுறங்கலாம்
வங்கமாகடல் வானுறங்குதே
வந்துபாரடா வாழ்த்துக்கூறடா
வெந்துபோனஎம் செந்தமிழீழத்தில்
எரிசரம் 'புலிப்படை'எறிந்ததாம்,

சந்தையில் குந்திக் கூடிப்பேசினார்
கூட்டமாக நின்றாடிப் பாடினார்.
தொந்திகுலுங்கிட சிரித்துப் பேசினார்
தொடையில் குத்திச்சூளுரைத்துப் பேசினார்
சந்தி தெருவெலாம் சரித்திரக் கதை
குண்டுபட்ட தோடெழுந்திடலானது.
சந்திராமனச் சாணக் கியமெலாம்
வீழ்ந்த விமானத் தோடெரிந்ததாம்.

ஈழமண்ணில் இராவணன் ஆண்டநாள்
இமயந் தாண்டியும் ஓடிய 'புஷ்பகம்'
வேழப்படை முகாமிருந்து வந்திடப்
புலிகள் விடுவரோ புரட்சிமண்ணிதில்
ஆழக்கடலதும் அகன்ற எல்லையுள்
'தாழ யாருமே பறந்திடா' தெனும்
ஈழத்தலைவன் பிரபாவின் ஆணையை
மீறிவந்ததால் வந்தவினை இது.



ஓடியோடி யோர் கோடிஆயுதம்
    கொண்டுவா சவக்குழிகள் தோண்டலாம்
பாடிப்பாடியே தோற்ற நாடுகள்
    படித்திடா திவர் பறந்து செல்கிறார்
ஆடிப் பாடிஇங் கணிதிரள் கிறார்
    அனைத்து நாட்டையும் எதிர்வுகொள்ளினும்
வாடிநின்றதோர் கொக்குப் போலவே
    வெற்றி கொண்டஎம் தலைவன் நிற்கிறான்.

பச்சைக் குழந்தைக்கும் பள்ளிச் சிறாருக்கும்
    பாதைபுரியாத வழிப்போக்கர் யாருக்கும்
இச்சைக் கினியாளோ டிணைந்த மணவாளன்
    ஈடற்ற பள்ளி, கோவில், தொழிற் சாலையெங்கும்
கொச்சைத் தனமாய்க் குண்டெறிந்தே 'அவ்ரோ'
    விதைத்த வினையின் அறுவடையோ?
வித்தைக்குத் தலைகொடுத்த வீரத்திருவிடத்தில்
    எத்திக்கும் வந்து வசமாகும் இனி!

## மண்ணிலே ஒருபிடி அள்ளி
## மேனியிற் பூசு

மா தவம் செய்தது கண்ணடா - எங்கள்
மண்ணிலே ஒருபிடி அள்ளடா
காதல்செய்; மேனியிற் பூசடா - வீரர்
கால்படும் பூமியைப் பாடடா.

வரிப்புலிகள் சேனையின்று வென்றது - பூ
வரசம்பூவும் வாழ்த்துப்பாடிக் கொண்டது.
எரிதணலில் பகைவிமானம் விழுந்தது - இங்கு
எழுந்த பனை வடலிகூட மகிழ்ந்தது.

மானமேறிக் கொண்டதடா தமிழினம் - இனி
மலருமீழம் காணுமடா புலியினம்
வானமேறி வந்ததடா சிங்களம் - எங்கள்
வசமிருந்த எரிகுழலால் மங்களம்

குகையிருந்த புலிதுணிந்து சீறிடும் - தமிழ்க்
குலமெழுந்து தலைநிமிர்ந்து ஆடிடும்
பகையரசு எதுவரினும் போரிடும் - பிர
பாகரனின் வழிநடந்து நீமிடும்.

- புதுவை இரத்தினதுரை